# சிவானந்த மாலை



அமரர். உயர் திரு

## சின்னத்தம்பி சிவானந்தன்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

அட்டப்பள்ளம் - அக்கரைப்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர். உயர்திரு

# சின்னத்தம்பி சிவானந்தன்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

அட்டப்பள்ளம்

அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்

## 17-05-2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமர்ப்பணம்

குடும்பத்தலைவனாய் வந்தாய் - பல
தருணங்களில் எமக்காக முன்னின்றாயே...!
பஞ்சமில்லாமல் நீ கொடுக்க - நாம்
மிச்சம் வைத்ததையும் சுவைப்பாயே...!
எம் முகவரியெல்லாம் - உன்
பெயரையே முதன்மைப்படுத்த அடையாளம்
தந்தவர் நீயே...!
உறங்காமல் நீ உழைத்து - எம் அழியாத
கல்விக்கும் வாழ்விற்கும் கருப்பொருளாய் நின்றாயே...!
எம்மை உயர்த்தி உன்னுடைய
சுகங்களை தொலைத்தாயே...!
காலம் வென்ற உறவாகி - அன்பில்
அரண் அமைத்து இறுதிவரை நீ
எமக்காக நின்றாயே...!
எங்கள் உள்ளத்தில் வீற்றிருக்கும்
அன்புத் தெய்வத்தின்
பாதக்கமலங்களிற்கு "சிவானந்த மாலை"
என்னும் இவ் இனிய
மலரினை காணிக்கையாக்குகின்றோம்.

**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு:
19-04-1955

உதிர்வு:
17-04-2021

# அமரர். உயர் திரு
# சின்னத்தம்பி சிவானந்தன்

**திதிவெண்பா**

விளங்கும் பிலவ வருடம் சனிவாரமதில்
சித்திரை நான்காம் நாள் பூர்வபக்க பஞ்சமியில் – எங்கள்
குலவிளக்கம் சிவானந்தன் ஐயா ஈசனடி
சேர்ந்த நாள் இந்நாளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

# பஞ்சபுராணம்

## தேவாரம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர்களைக் கண்இல்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல்வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றோன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## திருவாசகம்

முக்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருனைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனை
திருவிழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைகண்டு கண்டுள்ளங்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன்
விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
திருப்பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெல்லாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலாவுலாவிய நிர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமதான சற்குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிருவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்துவ வாழ்க்கை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்படும்"

எனும் குறள்வாக்கிற்கேட்ப நல்லறத்தோடு கூடிய சிறந்த விழுமியங்கள் நிறைந்தவனுடைய வாழ்வு பேரின்பத்தை வழங்கும் என்பதாக அமரர் சின்னத்தம்பி சிவானந்தன் வாழ்வும் அமையப் பெற்றதை அன்னாரின் வரலாறு சான்று பகர்கின்றது.

"அக்கரைக்கு இக்கரை பச்சை என்னும்
ஆன்றோர் மொழிக்கிணங்க
எக்கரையிருந்தும் மக்கள் - நம்
அக்கரையை வந்தடைவர்

சாதி இரண்டொழிய வேறில்லை கண்டீர்
பண்பான பாவுக்கிணங்க
பெரும்பான்மை சிறுபான்மை பாராது
பண்போடு பழகிவரும் பண்பான பாராகும்"
எனக் கவி போற்றுவதும்,

வடக்கே பசுமையான வயல்வெளிகளையும் கிழக்கே அழகிய வங்களாவிரிகுடா கடலையும், தெற்கே சேரனின் மனைவி சோர்துயில் கொண்ட கோளாவிலும் அதன் அருகே தில்லையாற்றையும் கொண்ட பனங்காடும், மேற்கே சிறப்பு மிக்க அகத்திக்குளத்தையும் அடக்கியுள்ள பிரசித்திபெற்ற அக்கரைப்பற்றிலே சின்னத்தம்பி சிவபாக்கியம் தம்பதியின் மூத்த புதல்வராக 19-04-1955 அன்று சிவானந்தன் அவர்கள் உயர் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தார்.

இவர் தனது ஆரம்ப பாடசாலைக் கல்வியை அக்கரைப்பற்று விவேகானந்த வித்தியாலயத்திலும் உயர் கல்வியை அக்கரைப்பற்று இராமகிருஸ்ணர் மிஸன் மகாவித்தியாலயத்திலும் பயின்று சிறுவயது முதலே ஒழுக்கத்திலும் பண்பிலும் உயர்ந்தவராக திகழ்ந்து விளங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கலைஞானம் மிக்கவரும் சிறந்த திறமையுடையவருமான இவரை மூத்த புதல்வராக பெற்று இவரது பெற்றோர் பாக்கியம் பெற்றனர். பெற்றோரைப்போலவே இவரும் பிறருக்கு மனமுகர்ந்து உதவிசெய்வதில் வல்லவராக சிறந்து விளங்கினார்.

இவரின் உடன் பிறப்புகளானவர்கள் சதானந்தன், சிவயோகம், சிவமலர் மற்றும் சிவகுமார் ஆவர். இவர்கள் அனைவருக்கும் மூத்த சகோதராக பெரிய அண்ணனாக இருந்து அன்பு செலுத்தி நல்வழிகாட்டி வாழ்வில் எழுற்சிபெற அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அதில் வெற்றியும் கண்டார்.

இவர் 1973ம் ஆண்டு அக்கரைப்பற்று பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இலிகிதராக தனது முதலாவது தொழிலை ஆரம்பித்தார். தொடர்ந்து மூன்று (3) வருடங்கள் அங்கு கடமைபுரிந்து 1976ம் ஆண்டு பொலிஸ் உத்தியோகத்தராக அக்கரைப்பற்றிலே பணியை ஆரம்பித்தார்.அதன் பின்னர் 1984ம் ஆண்டு தேசிய சேமிப்பு வங்கி மட்டக்களப்பில் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியை பொறுப்பேற்றார்.

02-04-1984 அன்று அட்டப்பளத்திலே வசித்து வந்த உயரிய சைவ வேளாளர் குலத்திலே அயிலேசப்பிள்ளை பார்வதிப்பிள்ளை தம்பதியிரின் புதல்வியான யோகேஸ்வரியை பெற்றோர் பெரியோர் சம்மதத்துடனும் ஆசீர்வாதத்துடனும் திருமணபந்தத்தில் இனைத்து இன்புற்றார்.

திருமண தம்பதிகள் முதலாவது குழந்தையாக ஆண்குழந்தையை 18-03-1985 அன்று பெற்றெடுத்தனர். அக்குழந்தைக்கு சிவா உபேந்திரா என பெயரிட்டனர். பின்னர் 1987ம் ஆண்டில் சிறைச்சாலை உத்தியோகத்தராக புதிய பதவிப்பரிமாணத்தை ஆரம்பித்தார். இப்பதவியில் தொடர்ச்சியாக பதுளை, மட்டக்களப்பு, கல்முனை, யாழ்ப்பாணம் மற்றும் மொனராகலை ஆகிய இடங்களில் பணிபுரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இத்தம்பதிகள் 21-03-1989 அன்று தமது இரண்டாவது ஆண்குழந்தையை பெற்றெடுத்து குபேந்திரா என பெயரிட்டனர். தொடர்ந்து 14-04-1994 அன்று மூன்றாவது ஆண்குழந்தையை பெற்றெடுத்து தர்மேந்திரா என்றும் பின்னர் 04-07-1999 அன்று பெண்குழந்தையை பெற்றெடுத்து மயூரா என்றும் பெயரிட்டு பாராட்டி சீராட்டி வளர்த்தனர்.

தனது குடும்ப கடமைகளை சிறப்பாக காலா காலத்தில் செய்து வைத்த அவர் மூத்த பிள்ளைகள் இருவருக்கும் உரியகாலத்தில் பொருத்தமான வாழ்க்கைத்துணைகளாக ராதிகா, ரேகா ஆகியோரை தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைத்து பூரிப்படைந்தார். இதன் மூலம் சுவர்ணவி, பேர்ஷ்விக் மற்றும் மஹிசான் ஆகியோரை பேரப்பிள்ளைகளாக பெற்று பெரும் பாக்கியம் கண்டார்.

அட்டப்பள்ளத்தில் பெருமை மிக்கவராகவும் சிறப்புமிக்கவராகவும் விளங்கிய இவர் தன்னாலான அனைத்து சேவைகளையும் ஒத்துழைப்புகளையும் தொண்டுகளையும் ஊரிலே அமைந்துள்ள ஸ்ரீ சிங்காரபுரியம்மன் ஆலயத்திற்கும் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திற்கும் வழங்கி ஆசிபெற்றார். இன, மொழி வேற்றுமை பாராமல் எல்லோருடனும் சிரித்து பழகும் குணமும் அவர்களிற்கு உதவும் மனப்பாங்கும் இவரது விஷேட சிறப்பம்சமாகும். இன்று மதிக்கப்படும் நிலைக்கு உயர்ந்துள்ள பலருக்கு இவரே ஊன்றுகோலாக இருந்துள்ளார். பின்னர் 2008ம் ஆண்டில் அம்பாறையில் பணிபுரிந்து இறுதியில் ஓய்வு பெற்றார்.

எளியவராகவும் யாவரையும் மதிக்கும் பண்பு கொண்டவராகவும் இன்முகம் காட்டி எல்லோருடனும் பழகுபவராகவும் ஏழை எளியவர்களுக்கு உதவுபவராகவும் இருந்து வாழ்ந்து காட்டிய அமரர் சிவானந்தன் அவர்கள் அனைவருக்காகவும் வாழ்ந்த வாழ்க்கைதனை உணர்ந்து ஒற்றுமையுடன் நல்வாழ்வு வாழ உறுதி பூணுதல் தான் நாம் அவருக்காற்றும் நன்றியாகும்.

ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம்பராயத்தின்போது







தம்பதியினர் இளவயதினில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை, தாய் மற்றும் உடன்பிறப்புகளுடன்



தம்பி சதானந்தன் குடும்பத்துடன்



தங்கை சிவயோகம் குடும்பத்துடன்




தங்கை சிவமலர் குடும்பத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பி சிவகுமார் குடும்பத்துடன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனார் மாமியாருடன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மனைவியின் பரிதவிப்பு...

ஏன் என்னை பிரிந்தீரோ....
கண்ணிமை அசைவில் ஐயனே
கனா போன்ற உன் முகம் வருகுதையா
பொழிவால் மீசை கொண்ட உன் முகம்
புகுந்ததிலிருந்து கண்ணீரே நான் கண்டதில்லையே

துணைவி எனும் ஸ்தானம் தந்த கடவுளே
உன் துணையின்றி இவ்வுலகில் வாழ்வது என் சாபமோ....
உன் அரவணைப்பில் அகிலமே என் காலடியில்
நீரின்றி சுவாசம் கூட இப்பொழுது எனக்கு சுமையே
வாவா என்று உன் குரல் கேட்காமல்,

இருதயமே இயங்க மறுக்கின்றதே
நீர் இறந்த செய்தி கேட்டு மறுகனமே
நானும் எமனின் பாசக்கயிற்றை எதிர்பார்த்து நிற்கும்
பேதையாய் என் மனம் வாடுதையா...
உன் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டிநிற்கின்றேன்.

ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...! ஓம் சாந்தி...!



அன்பு மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஓம் தத்புருஷாய வித்மஹே மஹா தேவாய தீமஹி !
தன்னோ ருத்ர ப்ரசோதயாது !"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மனைவியுடன்...













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா.....!

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து பண்புடமை காத்து
பக்குவமாய் வழிநடந்தீர்.....
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்.....

ஏனோ இறைவன் இடைநடுவில் பறித்துவிட்டான்.....
துன்புற்றோர் துயர் துடைத்து துணைக்கரமாய் அடைக்கலம்
தந்த உம்மை ஆண்டவன் ஏனழைத்தான்,
பண்புள்ளோரை பலகாலம் வாழவிடக்கூடாதென்றோ.....?

கண்முன்னேவாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் எங்கள் முன்னே
உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும். மண்விட்டு மறைந்து
நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும் கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்.

ஆண்டாண்டு காலமாய் வழிகாட்டிய
கலங்கரை விளக்கு அணைந்துவிட்டது.
அய்யோ! ஆசையாய் பெற்று வளர்த்து
அன்போடு அறிவையும் புகட்டிய எங்கள் அப்பா!

தான் அணிந்த சீருடையை முதலிரண்டு மகன்களுக்கும்
சீராக அணிவித்து அழகு பார்த்த எங்கள் அப்பா!
மூன்றாவது புத்திரனை பொறியியலாளனாயும்
கடைக்குட்டி மகளுக்கு சிறந்த பண்பையும், ஒழுக்கத்தையும் கூறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வரையும் சரியான பாதைக்கு செல்லவழிகாட்டிய
கலங்கரை விளக்கம் எங்கள் அப்பா...
செல்லுமிடமெல்லாம், ஜெயில்காட் சிவானந்தன் பிள்ளைகள்
என்றால் கிடைக்கும் கௌரவத்திற்கு அளவில்லையே அப்பா...!

உம் கண்டிப்புடன் பாசத்தை இனி யாரில் நாம் காண்போம்.....?
மீசைக்காரனாய் கம்பீரத்துடன் வலம் வந்த உம்மைப் பிரிந்து
தவிக்கின்றோமே.....

காக்கிச்சட்டையினால்,
காந்தமாய் எமையீர்த்த உம்மை காலன் கவர்ந்து சென்றதேனோ.....?
காலமெல்லாம் உம் உறவு நினைத்துருக காத தூரம் எமைவிட்டுச்
சென்றதேனோ.....?

நாமோ!! இன்று மங்காத உன் நினைவால் மயங்கியே நிற்கின்றோம்.
எம் நெஞ்சு அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா இறைபதம் சேர
இறைவனை இறைஞ்சுகிறோம்.....!!

ஓம் சாந்தி.....!! ஓம் சாந்தி.....!! ஓம் சாந்தி.....!!

*ஆசைப் பிள்ளைகள்*
**உபேந்திரா**
**குபேந்திரா**
**தர்மேந்திரா**
**மயூரா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைச் செல்வங்களுடன்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா என்றொரு மாணிக்கமே...!

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ மாமா...
வேரோடி விழுது விட்ட பெருவிருட்சமே மாமா நீங்கள்
எமை பாரோடு தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ மாமா...?
வானத்து நிலவாய் வலம் வந்து அரும் பணியாற்றிய அற்புத மாமாவே
இப்பிறவியில் அல்ல எப்பிறவியிலும் யாம் காணோம்
உமைப் போன்ற அருமருந்தை...

புகழ்மிக்க மனிதனாய் பண்பு நிறைந்த பேரொளியாய் விளங்கினீரே மாமா...
அன்புடன்எம்மை பேணிக்காத்து குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்தீரே மாமா...
எம் அன்புக் கணவர்களை எமக்களித்த தெய்வம் மாமா நீங்கள்
விருப்பமான இதயம் கொண்டு விரைந்தோடி தொண்டு செய்வீரே மாமா...
சிரிப்பான ரசத்தில் எங்களை மூழ்கடித்து மெய்மறக்க செய்வீரே மாமா...
மானிட நேயம் கொண்டு மாண்புடன் வாழ்ந்த மாமாவே

வானிடம் சரண்புகுந்து வைகுந்தம் ஏன் ஏறிவிட்டீர் மாமா...?
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது அன்பு மாமாவின்
பொன்னடிகளிலிருந்து எம் கண்ணீரைக்
காணிக்கையாக்குகின்றோம்.



*பேரன்பு கொண்ட மருமகள்கள்*
**ராதிகா, ரேகா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமுள்ள அப்பப்பாவே....!

மறுபடியும் வாங்க அப்பப்பா... மறுபடியும் வாங்க...
எங்களை தூக்கி அன்பாய் சுமந்து ஆசையாய்
முத்தம் தர யார் இருக்கா...?
வாங்க அப்பப்பா வாங்க...

எங்களை அணைக்கும் பொழுதில் உங்கள்
வீரமீசை குத்துமென அதையே எங்களுக்காக இழந்தீரே
வாங்க அப்பப்பா வாங்க...

உங்கள் தோளில் ஒருமுறை சாய்த்து
எங்களை துயில்கொள்ள செய்வீரே
வாங்க அப்பப்பா வாங்க...

நாங்கள் செய்த இம்சைகளை
இன்பமாய் நெஞ்சில் ஒற்றி சுமர்த்தீரே
இன்னும் ஒருமுறை எங்குசென்று விம்மியழுவோம்
வாங்க அப்பப்பா வாங்க...

நாங்கள் அழும் போதெல்லாம் கதைகள்
பல சொல்லியும் கன்னங்கள் கிள்ளியும்
எங்களை சுமந்தீரே
வாங்க அப்பப்பா வாங்க...

காரிலே ஏற்றிச் சென்று கேட்டதெல்லாம்
வாங்கி தந்து ஊரெல்லாம் சுற்றிக் காட்டினீரே
அன்பால் அழைக்கின்றோம்
வாங்க அப்பப்பா வாங்க...

உங்களை காண ஏங்கும் எங்கள் மனம்
உங்களுக்காய் காத்திருக்கு....!
சாமியிடம் சென்ற பாசமுள்ள அப்பப்பாவின்
ஆத்மா சாந்தியடையட்டும்



*என்றும் பாசமுள்ள பேரப்பிள்ளைகள்*

**சுவர்ணவி, பேர்ஷ்விக் மற்றும் மஹிசான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை
"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

# அட்டப்பள்ளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை
## ADDAPPALLAM SRI SITHTHY VINAYAGAR TEMPLE BOARD OF TRUSTEES

Addappallam,
Ninthavur- 10
Temple Regd No : **HA/5/AM/103/4/8/89**

அட்டப்பள்ளம்,
நிந்தவூர் - 10
பதிவு இல : HA/5/AM/103/4/8/89

## மறக்கமுடியாத எங்கள் அண்ணன் சிவானந்தன் பற்றி அட்டப்பள்ளம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய நிர்வாக சபையினர் வடிக்கும் நினைவலைகள்

எங்கள் சிவானந்தன் அண்ணன் அட்டப்பள்ளம் வாழ் சகல தமிழ் மக்களையும் அரவணைத்து செல்லும் எங்கள் அமரர் அயிலேசப்பிள்ளை குடும்பத்து மகளான யோகேஸ்வரி அவர்களை கரம் பற்றி எம் ஆலயமான ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தோடு மிகுந்த தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். பின்னர் ஆலயத்தின் தலைவராகவும் செயலாளராகவும் ஆலோசகராகவும் இருந்து எங்களை வழிநடாத்தியவர். இது மாத்திரமன்றி பழைய கோயிலை மீண்டும் புதுப்பித்து கும்பாபிஷேக நிகழ்வை திறம்பட நடாத்தித்தந்தவர்களுள் இவரும் ஒருவர் என்ற பெருமையும் இவரை சேருகின்றது.

மேலும் ஆலயத்தில் நடக்கும் சகல பூசை கிரியைகளில் தானும் தனது குடும்பமும் பங்கெடுத்து எமது ஆலயத்திற்கு பெரும் சேவை செய்தவர். சுகயீனம் காரணமாக சிறிது காலம் அவர் வீட்டில் இருந்தாலும் அடிக்கடி நாங்கள் அவர் வீட்டிற்கு சென்று பல ஆலோசனைகளை பெறக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. இனி யாரிடம் செல்வது என மனம் கலங்கி நிற்கின்றோம்.

"நல்ல செயல்கள் மூலம் பிறருக்கு வழிகாட்டியவர்கள் மக்கள் மனதில் என்றும் மரணிப்பதில்லை" என்பதற்கேற்ப எங்கள் சிவானந்தன் அண்ணன் எங்களை தவிக்கவிட்டு இறையடி சேர்ந்தாலும் எங்கள் மனதில் என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ சித்திவிநாயகரை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி..... சாந்தி..... சாந்தி.....

| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |
|---|---|---|

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் துணை



# ஸ்ரீ சிங்காரபுர மாரியம்மன் ஆலயம்
# ශ්‍රී සිංකාරපුර මාරියම්මන් ආලයම්
# SRI SINGARAPURA MAARIYAMMAN TEMPLE

பதிவு இல.: HA/05/AM/136

அட்டப்பள்ளம், நிந்தவூர்-10
Addappallam, Nintavur-10

திரு.த. கோபாலன் தலைவர் | திரு.சு.பிரதீப் செயலாளர் | திரு.கி.பிரேந்திரன் பொருளாளர்

## *நெஞ்சைவிட்டு அகலாத எங்கள் அண்ணன் சிவானந்தன் அவர்களுக்கு அட்டப்பள்ளம் ஸ்ரீ சிங்காரபுர மாரியம்மன் ஆலய நிர்வா சபையினர் வடிக்கும் நினைவலைகள்*

எங்கள் சிவானந்தன் அண்ணன் அட்டப்பள்ளத்து தமிழ் மக்களையும் இவ்வூர் மண்ணையும் பாதுகாத்துவரும் அயிலேசப்பிள்ளை ஐயாவின் குடும்ப மகளான யோகேஸ்வரி அவர்களை கரம்பிடித்த நாள் தொடக்கம் எல்லாவற்றிற்கும் எங்களுடன் சேர்ந்து பக்கபலமாக நின்றவர்.

அத்துடன் ஸ்ரீ சிங்காரபுர மாரியம்மன் ஆலயம் புதிய ஆலயமாக அமைக்க தொடங்கும் போது தனது குடும்ப பங்களிப்பும் அதில் சேர வேண்டும் என்று நினைத்து அடித்தள வேலைக்கு தன்னால் இயன்ற பொருட்களை வாங்கித்தந்தவர். இவ்வாறாக எங்கள் ஆலய வளர்ச்சியில் முன்னின்று பாடுபட்டவர்களுள் இவரும் ஒருவர்.

அத்துடன் ஊர் மக்கள் அனைவருடனும் அன்பாகவும் நகைச்சுவையாகவும் பேசி ஊர் மக்கள் அனைவராலும் அத்தான் என்று அன்பாக அழைக்கப்பட்டவர்.

இப்படிப்பட்ட எங்கள் சிவானந்த அண்ணனை மறக்கத்தான் முடியுமா.... என்ன செய்வது பிறந்தவர்கள் என்றோ ஒருநாள் இறையடி சேர்ந்தே ஆக வேண்டும் என்று மனதினை தேற்றிக் கொள்வதினைத் தவிர வேறு வழியில்லை.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல ஆதிபராசக்தி ஸ்ரீ சிங்காரபுர மாரியம்மனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி..... சாந்தி..... சாந்தி.....

**இவ்வண்ணம்**
**ஆலயத் தலைவர் த. கோபாலன்**
**மற்றும் நிர்வாக சபையினர், ஊர் மக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறப்புக்களின் இதயக்குமுறல்கள்

அன்பு அண்ணா,

எனக்கு மூத்த அண்ணனாகிய நீங்கள்

ஒரு தந்தையைப் போல எங்களுக்கு நல்வழிகாட்டினீர்கள்.

எங்களுக்கு மட்டுமல்ல

உதவி என்று வருபவர்களுக்கு

மனம்சோராது உதவி செய்பவர்.

எனக்கு துறைமுக அதிகாரசபையில்

வேலை எடுப்பதற்கு உறுதுணையாக

நின்று வேலை எடுத்துத் தந்தவர் நீங்கள்

அதுமட்டுமல்லாது எனது வாழ்க்கைத் துணைவியை

எனக்கு அறிமுகம் செய்தவரும்

நீங்கள் தான் அண்ணா

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை

வேண்டி நிற்கின்றேன்.

**சதானந்தன், மனோரஞ்சனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரிய அண்ணாவே,**

உன்னை இனி எப்போது காண்பேன் எனக்கு செய்த உதவிகளும், செய்த சேவைகளும் அளவிட முடியாது.

பெரிய அண்ணாவே உன்னுடைய கம்பீரமான நடை உடைகளை என்றும் மறக்க முடியாது. எனது மூத்த மகன் வயிற்றில் இருக்கும் போது நீ பட்ட கஷ்டங்களை என்னால் மறக்க முடியாது. அக்கரைப்பற்று வைத்தியசாலையில் பிறக்க இருந்த என் மூத்த மகன் (அசோக்) தவிர்க்க முடியாத சில காரணங்கள் காரணமாக அம்புலன்ஸ் மூலம் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதை அறிந்த நீ டியூட்டியில் இருந்தவாறே மயங்கி விழுந்து விட்டாய். இதுவே என்மீதுள்ள உன் அளவிடமுடியாத பாசத்தைக் காட்டுகின்றது. மேலும் என் மூத்த மகன் பிறப்பதற்கு பல சிக்கல்கள் எழுந்தது மருத்துவர்கள் உடனே இரத்தம் பாய்ச்ச வேண்டும் என்று கூறினர். உடனே விரைந்து வந்து இரத்தம் தந்தாய். இதற்கெல்லாம் உனக்கு எத்தனை முறை நன்றி கூறினாலும் தகுமோ அண்ணா.

நீ இறப்பதற்கு முதல்நாள் உன்னை வந்து பார்த்த போது ஒரு சேட் (Shirt) வாங்கி வந்தேன். ஆனால் நீயோ "ரீ - சேட் (T - Shirt) வாங்கித்தா" என்று கேட்டு என்னுடன் நீண்ட நேரம் சிரித்துப் பேசினாய். நீ சிரித்த சிரிப்பு இப்போதும் என் கண்முன்னே வந்து போகிறது. அந்த சிரிப்பை மறக்கும் முன்னே காலன் உன்னை அழைத்துவிட்டான்.

என்னருமை மைத்துனரே பாசமிகு தங்கையின் ஆழமான கருத்துக்களிலும் வெளிப்படுத்தப்பட்ட அண்ணன் தங்கைக்கான பாசத்தை காண்பதற்கான சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த மைத்துனரே 1983ம் ஆண்டு யூலை கலவரத்தின் போது என்னை அமரவைத்து உபசரித்து வாயினால் சொல்லமுடியாத பல உதவிகளை நீரும் உமது பாசமிகு மனைவியும் செய்தவற்றை நாங்கள் எங்களது ஆன்மா உள்ளவரை மறக்கமுடியாத நற்காரியம் என நினைவு கூர்ந்து தங்களின் ஆத்மாசாந்தி அடைய நாங்கள் எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மைத்துனர் **சின்னத்தம்பி கனகரெத்தினம்** (ஓய்வு நிலை பிரதம உள்ளக கணக்காய்வாளர்) மற்றும் **மீனாட்சி (சிவயோகம்)**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாசமிகு அண்ணாவே,**

உன்னை இழந்து தவிக்கின்றேன். சிறுவயதில் இருந்து தந்தையை போல் என்னை பாசங்காட்டி வளர்த்தாய்... நீ எனக்கு செய்த உதவிகளை எங்கனம் ஈடு செய்வேனோ தெரியவில்லை. சிறுவயதில் எனக்கு ஒரு சட்டை வாங்கினால் அந்தச் சட்டையின் நிறத்தை ஒத்த காப்பு, தோடு, கிளிப், செருப்பு என்று விதம் விதமாய் வாங்கித்தருவீர்கள். மேலும் நினைத்ததை எல்லாம் கேட்ட உடன் உடனடியாக வாங்கித்தருவீர்கள். நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போதே எனக்கு மூக்கு குத்தி விட்டீர்கள்.

இப்போது மூக்குக் குத்துவது தான் நாகரீகம் என்று கூறுவீர்கள். எனக்கு சிறுவயதில் இருந்தே நாகரீகமான உடைகளை அணிய பழக்கப்படுத்தினீர்கள். வேலைக்கு சென்று விடுமுறை நாட்களில் வீடுவரும் போது விதம் விதமான ஆடைகள் வாங்கி வருவீர்கள். திரையரங்கு, கடற்கரை, கோயில், சுற்றுலாக்கள் என்று எல்லா இடத்திற்கும் கூட்டிச் சென்றீர்கள்.

எனக்குத் திருமணம் ஆனபிறகும் எனது கணவன், பிள்ளைகளுக்கும் நிறைய உதவிகளைச் செய்து எங்கள் மீதுள்ள அளவிடமுடியாத பாசத்தை நிரூபித்து விட்டீர்கள். உமது ஆத்மா எமது தாய், தந்தையின் ஆத்மாக்களுடன் இரண்டறக்கலக்க வேண்டுகிறேன்.

மைத்துனர் **குமரப்பெருமாள் தேவராஜன்** (ஓய்வு நிலை இலிகிதர் இ.போ.சபை) மற்றும் **ராசமணி (சிவமலர்)** ஆசிரியை (தம்பிலுவில் ம.ம. வித்தியாலயம்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியண்ணா,

கடைசித் தம்பியாகிய என்னை
உமது மகனைப் போல்
பாசம் காட்டி செல்லமாக வளர்த்தீர்கள்.
எனது முன்னேற்றத்திற்கு
உங்களால் இயன்ற உதவிகளை செய்து
என்னை ஒரு பொலிஸ் உத்தியோகஸ்த்தராக்கினீர்கள்.
உமது நல்லமனமும், நற்குணமும்
எங்களால் மறக்கவே முடியாது அண்ணா.
எமது பெற்றோரை நீங்கள்
சென்றடைந்து நற்கதியடைய
உமது சகோதரங்களாகிய
நாங்கள் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மாத்தையா (சிவகுமார்), ரதிமலர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருடன் விடைகொடுக்கும் அன்பு மைத்துனன்

கலகலப்பான மனிதர்,
கவலையோடு அவர் இருந்ததை,
நான் கண்டதில்லை கவிநயம் கொண்டவர்,
கற்றோர் உள்ள சபையிலும்,
கல்லாதோர் உள்ள சபையிலும் கவிநயம்
கொண்ட நகைச் சொற்களாளும்,
கதைகளாலும் மற்றவர்களை
சிரிக்கவைப்பதில் வல்லவர்.

கோபம் ஒருபுறம், குணம் மறுபுறம்
இரண்டையும் தராசில் இட்டால்,
குணம் உள்ள பக்கத்தட்டு கரிக்கும்.
பிறருக்கு உதவி செய்வதானால்
எவ்வளவு கீழ் இறங்கமுடியுமோ
அவ்வளவு கீழ் இறங்கிச் செய்வார்.

என்னுடன் எவ்வளவு சண்டையிட்டாலும்
விரைவில் சமாதானமாகிவிடுவார்.
எந்த ஊர் சென்றாலும் அவ்வூர்களில்
ஒரு நண்பரையாவது அவர் சம்பாதித்து வைத்திருப்பார்.
இதுதான் செல்வாக்கு என்பது.
இதனால் இவரை பலர் அழைத்துச் சென்று
தங்கள் காரியங்களை முடித்துக்கொள்வார்கள்.

இன்னும் எவ்வளவோ கூறிக்கொண்டே போகலாம்....!

அத்தான்,
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு விடைகொடுக்கும் அன்பு மைத்துனன்.

**அ. இரத்தினகுமார்**
(ஓய்வுபெற்ற CDO)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமுள்ள பெரியப்பா!

அன்பின் சிகரமாய்! அணையா தீபமாய்!
பரிவே சிந்தனையாய்! பாசமிகு தந்தையாய்!
சமூக ஜோதியாய் சகலர்க்கும் நீதியாய்
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறை தெய்வமான
எங்கள் பாசமிகு பெரியப்பாவே! தேடரிய பொக்கிஷமே!

எங்கள் அப்பாவிற்கு நிகராக நின்றீர்களே!
எங்கள் சீர் சிறப்பு பார்த்து மகிழ்ந்தீர்களே!
உங்கள் பிள்ளைகளுக்கு சமமாய்
எங்களைப் பார்த்தீர்களே பெரியப்பா,
இனிமேல் உங்கள் அன்பும், அரவணைப்பும்
ஆசீர்வாதமும் எங்களுக்கு திரும்ப
எப்போது கிடைக்குமோ தெரியவில்லை.

அன்பான வார்த்தைகளால் எங்களை
கட்டிப்போட்டு அருமையான கதைகள்,
தகவல்கள் எங்களுக்கு கூறி, அறிவாற்றல் பெருகச் செய்தீர்களே,
சென்றதேனோ பெரியப்பா..?

சிப்பிக்குள் இருக்கும் முத்துப் போல் எங்களுக்கு
கிடைத்த அரிய பொக்கிஷம் நீங்கள்
உங்களை தொலைத்து விட்டு தவிக்கின்றோம்.
இனி உங்கள் இடத்தை நிரப்புவதற்கு
யார் வருவார் பெரியப்பா!

உங்களுக்கு இதயம் நிறைந்த அஞ்சலியை செலுத்தி
நிற்கின்றோம் நாங்கள்,
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



உங்கள் பிரிவால் துயருறும் அன்பு பெறாமக்கள்
**நிதர்சனன், நிதுர்சனன், நிவேதனன், நிறோசனன்**
**டிலுக்ஷி, டிலக்ஷனா, புவிஸ்திகா, புவிஸ்கா**
**சதீஸ்காந், தனுஸ்காந், ருஷானி, கிறிஸ்காந்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுக்கோர் பாலம்

மருமக்கள் ஆகிய நாங்கள் எம்முடன்
உறவாடி நின்ற ஒரு உறவுப்பாலத்தின்
பிரிவுத்துயரால் கவலை வெள்ளத்துள்
ஆழ்ந்து நிற்கின்றோம். "பீப்பி மாமா"
என்று ஆசையாய் அழைக்கும் எங்களையும்
தன் பிள்ளைகள் போல் அன்போடு அரவணைத்து
நின்ற தெய்வீகப் பிறவி. பாசத்திற்கு
உறைவிடமான அன்புப் பெட்டகம்.
ஆலயங்கள் பல சென்று அர்ச்சனைகள் பல
செய்து எல்லோரும் வாழ இறைவனிடம்
வேண்டி நிற்பீரே பீப்பி மாமா.

பல விழுதுகளைத் தாங்கி நிற்கும்
ஆலமரம் போல் உங்கள் அனைத்து
சொந்தங்களையும் தாங்கி நின்று,
வாழ்க்கைப்பாதையில் அயலவர்களுடனும்,
சுற்றத்தாருடனும் அன்பாகவும், பண்பாகவும்
நடந்து கொண்டு இறுதிக்காலம் வரை
நன்றாக வாழ்ந்து காட்டினீரே,
நகைச்சுவைப் பேச்சால் அனைவரின்
கவனத்தையும் உங்கள் பக்கம்
எடுத்துக் கொண்டீரே பீப்பி மாமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அழகிய நாட்கள் மீண்டும்
எப்போது வருமோ தெரியவில்லையே
ஆனால் கல்மேல் எழுத்துப்போல்
அந்த பொன்னான தருணங்கள்
எங்கள் மனதில் நீங்காத சுவடுகளாய்
என்றென்றும் நிலைத்து நிற்கும் பீப்பி மாமா

மனிதப்பிறவியை சிறப்புடன் வாழ்ந்து
முடித்த உங்கள் ஜீவாத்மா
பரமாத்மாவாகிய இறைவனின்
பாதத்தில் சென்று சாந்திபெற
மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும் அன்பு மருமக்கள்*
**ஜனார்த்தனன்,**
**தனுஜனன்,**
**மனோஜனன்,**
**டினுஜன்,**
**ஜவஹர்,**
**ஹரிஸ்காந்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமுள்ள சித்தப்பா

எங்கள் அன்பு சித்தப்பாவே!
சித்தப்பா என்று கூறும் போது
உங்கள் முகத்திலே ஒரு புன்சிரிப்பு
அது இப்போது எங்கள் கண்முன்னே
தெரியுதே சித்தப்பா

கடைக்கு போகும் போதும் வரும் போதும்
என்ன வேணும் என்னவேணும்
என்று கேட்டுக் கேட்டு வாங்கி
தருவீர்களே சித்தப்பா
இனி எங்களுக்கு இப்படி
கேட்டுக்கேட்டு யார் வாங்கி
தருவார் சித்தப்பா
வீடு தேடிவந்து அறிவுரை
கூறுவீரே, சிரித்து பேசுவீரே
இனியார் எங்களுக்கு
இதையெல்லாம் செய்வார்?

இப்போதும் எப்போதும் உங்கள்
பேச்சு எங்கள் காதில் கேட்டுக்கொண்டே
இருக்கும் சித்தப்பா
கடைசியில் எங்களுடன் பேசாமலே
போய்விட்டீரே! உங்கள்
பிரிவை ஏற்க முடியவில்லை சித்தப்பா

என்ன செய்வது? எல்லாம்
விதி விட்டவழி என்று உங்கள் நீங்காத
நினைவுகளுடன் வாழ பழகுகிறோம்.
உங்கள் ஆன்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



*அன்புப் பெறாமக்கள்*

**குருபரன், கிருபாநந்தன், உமாகரன், குகதர்ஷினி, குகரஞ்சினி, வினோதா, கபீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *எமதருமை மாமாவே....!*

கண்ணில் உயிரை வைத்துக் கொண்டு இன்று
காற்றில் கலந்து விட்டீர்கள் - மாமா
இந்த மண்ணில் உங்களை போல் சிரிப்பூட்டவும் மகிழ்வூட்டவும்
இனி யாரை நாங்கள் காண்போம்.....?

விண்ணில் நட்சத்திரமாய் மின்னும் பிரிந்த உயிர்
என்று பிறர் சொல்லி கேட்டதுண்டு - மாமா
உங்களை எந்த விண்மீனாய்
நாம் காண்போமோ.....?

நோயோடு வந்திருந்தாள் நொந்திடோமே
காலன் சாவெடுத்து போனானே - மாமா
சாகின்ற வயதா உங்களுக்கு
சாந்தியாய் போனது ஏன்.....?

அன்று முதல் இன்றுவரை என்றும்
உங்கள் முகம் வாடி நாங்கள் பார்த்ததில்லையே - மாமா
உங்களோடு பேசியவர் உள்ளம் என்றும்
துன்முகத்தை நாடியதில்லை ஏன்.....?

அன்று மூடிவைத்து உங்கள் முகத்தை நாங்கள்
கூடிவந்து கொண்டு செல்லும்
கொடிய நிலை ஏனோ - மாமா

என்றும் பாவெடுத்து பாடி நிற்கிறோம்
அன்பின் பூவெடுத்து போற்றி நிற்கிறோம்
நலன்கள் பல செய்து நாங்கள் என்றும் வேண்டுகிறோம்
உங்கள் சாந்தி என்றும் நலமாக அமையட்டும்
எமதருமை மாமாவே.....!

*பிரிவால் ஏங்கி நிற்கும் அன்பு மருமக்கள்,*

**பிரேம்குமார், இரந்தீர்குமார், தினேஸ்குமார்,
லக்ஷனா,
கௌசிகன், சௌமியா, விதுஷாளினி,
தானியா, சுஜன், பிருத்தியா, வக்ஷியா,
திலுக்சன், தேனிஜன், கேனுஷா, அதுக்ஷா,
பிரசாந்தன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

## திருச்சிற்றம்பலம்



**தொல்லை யிலும்பிறவிச் சூழும் தளை நீக்கி**
**அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்**
**திருவா சகம் என்னுந் தேன்**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன் கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாவு நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமாள்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப்பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தாற்போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தைபெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண்ணுணர்வே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கும் வரவும் புணர்வும் இல்லாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்று இன்பவெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலகுரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதார கௌரி விரதம்

## மந்திர சுலோக தோத்திரங்கள்

இம் மந்திர சுலோகங்கள் பார்வதி தேவியாருக்கு வால்மீகி மகரிஷி உபதேசித்ததைப் பரமேஸ்வரி கேட்டு நோன்பு நோற்றுப் பேறு பெற்றதைத் தேவலோகக் கன்னிகைகள் பூலோக மக்கள் அனைவரும் அனுஷ்டிக்கும் காரணமாய பாக்கியவதி புண்ணியவதிகளுக்குக் கற்பித்தவைகளுமே.

ஓம் சிவாய நம
ஓம் மஹேஸ்பராய நம
ஓம் சம்புவே நம
ஓம் பிநாகினே நம
ஓம் சசிசேகராய நம
ஓம் வாமதேவாய நம
ஓம் விருபாஷாய நம
ஓம் நீலலோகிதாய நம
ஓம் சங்கராய நம
ஓம் சூலபாண்யே நம
ஓம் கட்வாநே நம
ஓம் விஷ்ணுவல்லபாய நம
ஓம் சிபிவிஷ்கடாய நம
ஓம் அம்பிகா நாதாய நம
ஓம் ஸ்ரீகண்டாய நம
ஓம் பக்தவத்சலாய நம
ஓம் பவாய நம
ஓம் சர்வாய நம
ஓம் திரிலோஹேசாய நம
ஓம் சிதிகண்டாய நம
ஓம் சிவாப்பிரியாய நம
ஓம் உக்கிராய நம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் தரஜஃமூர்த்தியே நம
ஓம் பரமாத்மநே நம
ஓம் சோமசூரியாக்கிநீ நீலோகநாய நம
ஓம் அவிஷே நம
ஓம் யக்ஞமயாய நம
ஓம் சோமாய நம
ஓம் பஞ்சவத்திராய நம
ஓம் சதாசிவாய நம
ஓம் விஸ்வேசாய நம
ஓம் வீரபத்திராய நம
ஓம் கணநாதாய நம
ஓம் பிரசாபதியே நம
ஓம் இரணியரேதசே நம

ஓம் கபர்த்தியே நம
ஓம் காமரியே நம
ஓம் அந்தகாசூரசூராய நம
ஓம் கங்காதராய நம
ஓம் லலாடஷ்ஷாய நம
ஓம் காலகாலாய நம
ஓம் கிருபாநிதயே நம
ஓம் பீமாய நம
ஓம் பரசு அஸ்ததாய நம
ஓம் மிருகபாணியே நம
ஓம் சடாதராய நம
ஓம் கைலாலைவாசினே நம
ஓம் கவசினே நம
ஓம் கடோராய நம
ஓம் திரிபுராந்தகாய நம
ஓம் விரிஷாங்காய நம
ஓம் விருஷபாரூடாய நம
ஓம் பாஸ்மோத்தூளித விக்கிரகாய நம
ஓம் ஸாமப்பிரியாய நம
ஓம் ஸர்வம்யாய நம
ஓம் அநீஸ்பராய நம
ஓம் ஸர்வஞ்ஞாய நம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்தானுவே நம
ஓம் அகிற்பத்தினியாய நம
ஓம் திகம்பராய நம
ஓம் அஷ்ட மூர்த்தயே நம
ஓம் அநோகாத்மனே நம
ஓம் சாத்திவிக்கிரகாய நம
ஓம் சுத்தவிக்கிரகாய நம
ஓம் சாஸ்வதாய நம
ஓம் கண்டபிரசவே நம
ஓம் அஜாய நம
ஓம் பாசவிமோசகாய நம
ஓம் ஸாம்பாய நம
ஓம் மிருடாய நம

ஓம் துர்த்றாஷாய நம
ஓம் கிரிசாய நம
ஓம் அநகாய நம
ஓம் அரூபாய நம
ஓம் புஷங்கபூஷணாய நம
ஓம் பர்க்காய நம
ஓம் கிரதந்திவிநே நம
ஓம் கிரீத்திவாசமே நம
ஓம் புராரதையே நம
ஓம் பிரமதரதிபாய நம
ஓம் மிரத்தியுஞ்சாய நம
ஓம் சூட்சமதனுவே நம
ஓம் ஜகத்யாப்பியோ நம
ஓம் ஜகத் குருவே நம
ஓம் வியோமகேசாய நம


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் மகாஜனந்தராய நம
ஓம் மகாஜனகாய நம
ஓம் சாருவிக் ரகாய நம
ஓம் ருத்ராய நம
ஓம் பூதயதயயே நம
ஓம் பசுபதியே நம
ஓம் தேவாய நம
ஓம் மகாதேவாய நம
ஓம் அவ்வியாய நம
ஓம் அரேய நம
ஓம் பசுநேத்ராதயே நம
ஓம் தட்சத்துவரஹாய நம
ஓம் ஹரயே நம
ஓம் அவ்வியததாய நம
ஓம் சகஸ்ராஷாய நம
ஓம் சகஸ்திரபதியே நம
ஓம் சவ்வர்க்கபிரதாய நம
ஓம் அபவர்க்காய நம
ஓம் சுனந்தாய நம
ஓம் அனந்தகாய நம
ஓம் தாரகாய நம
ஓம் பரமேசாய நம

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்விரதப் பலன்கள்

தம்பதிகளாக ஷேமமாக இருத்தலும் பிணி நீங்கலும் வறுமை நீங்கி செல்வம் பெறுவதற்கும் கன்னியர்களுக்கு திருமணம் விரைவில் நடைபெறவும் சிவனருளை பரிபூரணமாக பெறுவதற்குமாகும்.

விண்ணிளி லொளியாய் விளக்கினிற் சுடராய்
வெயிலவன் கதிரென விளங்கும்
கண்ணினின் மணியாய் மணியினி லுருவாய்
கருத்தினிற் கலந்திடிக் குலையார்
எண்ணிதிற் கமையா தீசனே சிவமே
எம்பெரும் வினைகளை யெரிக்க
நண்ணுமோ கருணை நல்குமோ அறியோம்
நாடிடும் கௌரியம் பரனே.

## கௌரி காப்பின்போது படிப்பவை

முன் நின்று செய்யுள் முறையாய் புனைதற்கு
என் நின்ற ருள்க செய் எலியூர்தி - மன்னவா
சொற்குற்றம் ஏனைப்பொருள் சேர் தொடைக்குற்றம்
எக்குற்றம் வாராமலோ

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்மாள் தாயாளே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளி மகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளி மகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கைக் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறுமுன்னே போட்டவளே
அசுரர் குலம் யாவும் அழிக்கும் சுடர்க் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீ இருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனை அணைத்தே அருள் மாரி பொழிந்தாளே
வகையாற்று படலமிதை வழிவழியாய்க் காட்டுவீர்
நெறியறியாத்திகைப் போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயமம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு பருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
பிள்ளைகள் அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நாம் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடை தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடை தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பலவகைத் திரவியங்கள்
நானுனக்கு தாறேனம்மா நயந்தென்னைக் காரும் மம்மா
காளிமகா தேவியரே காசினுக்கு வித்தவளே
வித்தைவிதைப்பவளே வினை காக்கும் காப்பவளே
என் தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்குப் போட்டு விட்டால் கல்மனதும் இளகிவிடும்
ஞானம் பெருகி வரும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோருக்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்ல தெல்லாம் பெருகிவிடும்
நாள் கோள் இவையெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்பினைக் கட்டிவிட்டு கடமை முடிந்தென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறும் காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதில் விழித்திடுவேன்
ஞானக் கொழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்கு கையில் பூண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் ஏரிபோல் கனன்றிடுவேன்
தீமைச் செயலேதும் கண்திறந்து காட்டுமம்மா
சொல்லற் கரிதான சோதிமுகு காப்பதனை
இருபத்தொரு நாள் வரையில் இசையும் விரதமொடு
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
பக்தி மனதோடு பரவி அணிவோருக்கு
சித்தி யெலாம் தருவாள் பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால முணர்வுமுண்டு
இச்சகத்தில் உள்ளோர் எல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலக்கமொடு வந்திடவே
அச்சக்தியெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பபதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவிட
ஞானங் கிளர்ந்து வர நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவிபராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கௌரியம்மா காப்பருள்வாய்.

**இப்பூலோகத்தில் கேதார விரதத்தை மனப்பூர்வமாக விரும்பிச் செய்பவர்களுக்குப் பரமேஸ்வரன் சகல செல்வங்களையும் அநுக்கிரகிப்பார்.**

**அன்பர்கள் இந்த நோன்பை பக்தி விநயத்தோடு செய்து சுகஷேமங்களை அடைந்து மேன்மையாக வாழ்வார்களாக. சுபம் சுபம் சுபம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்ச மாலை



## விநாகயர்

திருச்சிற்றம்பலம்

அரியானைக் கணபதியே அரனார் சேயே
ஐங்கரனே பங்கையம்சேர் உமையாள் கண்ணே
கரிமுகனே கற்பகமே கசடறுத்து
கவியதற்கு முன்னிற்க வேண்டுமையா
பரிவொடு மோட்சவழிப் பாதைகாண
பாழுடம்பு விட்டகன்று பறந்ததையா
தெரியாத சீவனுக்காய் துணையாய் நின்று
திருமாலின் பதம்சேர அருள்செய்வாயே.

அருள் செய்வாய் குஞ்சரனே அமரரோடு
அடியாரின் ஆத்மாவை அடையச்செய்து
பெருவழியில் இடைநின்று மோட்சப்பாதை
பிழைபொறுத்து சீவனுக்கு காட்டுமையா
கருணைகொடு கற்பகமே கழிறேமாலின்
கண்ணரிட வைகுந்த வளியில்நின்று
இருளகற்றி இந்திரபதி புகுதற்பாதை
இன்பமுடன் அழித்தருளப் போற்றினோமே

போற்றி ஜெககணநாதா போற்றி போற்றி
பொன்மலர்தாழ் இணையடிகள் போற்றி போற்றி
ஆர்ப்பரித்து இச்சீவன் அலையாவண்ணம்
ஆனைமுக வாரணனே அமரர்வாழும்
ஏற்றமுறு வைகுந்தம் போகும்பாதை காட்டுமையா
இன்பமுடன் அன்புவைத்து
சீற்றமுடன் உமைத் தொழுதோம் சித்தி முத்தித்
திருக்கயிலாய வீடடைய அருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாசக்தி



அம்பிகை உமையேருத்திரி அச்சுதன் தங்கையாளே
எம்பிரான் தேவிநீலி ஈஸ்வரி கெவுரிமாரி
கொம்புடை மகிடாசூரன் கூர்பலி இட்டகாளி
சந்திரப்பதிமா வைகுந்தம் தாயேநீ காட்டுவாயே

சாம்பவிதுர்க்கை வாலைச்சாத்தகி சுடலைநாச்சி
பாம்பணி பராபரத்தி பகைவரை அழித்தசூலி
நராயணிவராகி தேவிநலமருள் உருத்திராணி
பூவனை அபிராமிமோச்ச புகுவழி காட்டுவாயே

ஓம்சக்தி உலகமாதா உன்னடி தஞ்சம்மா
வாமவதேவநீல வண்ணரின் பதியைநாடி
ஊன்னுடல் விடுத்துச்சீவன் உடன்னெதிர் வந்தம்மா
கானெடு காளித்தாயே காட்டுவாய் வைகுந்தம் நீயே.

## சிவன்

அத்தனே அரனே ஆதிஅமலனே உமையாள்பங்கா
பத்தனே பிரானே தில்லைப்பெரு நடமிட்டபாதா
சுத்தவெண்ணீறு பூசிச்சுடலையில் ஆடும்சோதி
கர்த்தனே கயிலைவாசா கடவுளே நமசிவாய



கற்பனைக் கடந்தசோதி கதிருடல் விட்டுச்சீவன்
சொற்படி இயமதூதர் சுருக்கிட்டு கொண்டுவந்தார்
சித்தமாய் உருத்திராயாயிச் சீவனை நரகில்புக்கா
நற்பதி மோட்டசவீடு நல்குவாய் நமசிவாய

சங்கரா சம்போதேவா சதாசிவா நீலகண்டா
திங்களும் அரவம் சூடும்சிவசிவா இவரின் ஆத்மா
தங்குகள் தடைகள்யின்றி தட்சணம் அணைத்துக்கொண்டு
அங்கு உன்பாதம் போற்ற ஆண்டருள் நமசிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன்



தேவர்கள் இடுகண்தீர்த்த செந்தியம் பதியின்வாழ்வே
தாமதம் இன்றிச்சீவன் தனிவளி வந்ததையோ
வேலவா மோட்சவீடு விரதமாம் பதியைக் காட்டி
காலனார் கொடுமை செய்யாக் கந்தனே காத்திடாயே

சரணமே சரணம் செவ்வேள் சரவணபவனே சீவன்
பிரவண ஒலியினோடு பிரமனின் படைப்பைவிட்டு
அரகரமுருகா வந்துன் அடைகலம் சேர்ந்ததையோ
வரமருள் வடிவேலோனே வைகுந்தம் அருள் செய்வாயே

அழகனேகுமரா ஆண்டிஅறுபடை உறையும் ஞானப்
பழம்பெரும் கனியே மோட்சப் பதிதனை அடைந்தசீவன்
உன்கழலடி பணிந்துகொண்டு கடைத்தேற முத்திநல்காய்
இளநகை அயில்வேல்கொண்ட ஏந்தலே போற்றி போற்றி

## நாராயணன்



அரிகரிராம ராமாஅச்சுதா அசோதை புத்திரா
சிறிநமோ கிஸ்னதேவா திருவடி அழந்தபாதா
கருமுகில் மேகவண்ணா கருடவாகனே கண்ணா
முரகரிமுகுந்தா மோட்ச முத்திவீடளித்திடாயே

மாதவா வெங்கடேசா மாயனே வைகுந்தவாசா
ஆதவா இவரின் ஆத்மா அடைக்கலம் உமதுதாழில்
நீதனே நீலவண்ணா நெடியவா மோட்சவீடு
மதிசூதனே நந்தகோபாலா துணைபுரிந் தளித்திடாயே

பூதகிமுலைப் பாலுண்ட புருசோத்தம தேவதேவா
ஜானகிமணளா றங்காயாதவ குலதிநீதா
பூமகள்கண வாமுத்தி மோட்சநற் பரகதிநல்கி
தேவர்கள் தங்களோடு திருக்கயிலாயம் சேர்ப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமாதேவி



பூமிமாதேவியம்மா உன்பொன்னடி சரணம்தாயே
தாமதமின்றி இந்த சடலத்தை ஏற்றிடம்மா
மேலும் இவ்வாத்மா தன்னை விரைந்துநீ அழைத்திடாது
சாமிநின் சரசகோபால் சன்நிதி சேர்த்திடாயே

அடைக்கலம் அடைக்கலம் காண் அம்மையே பூமிமாதா
உடலது உந்தன் பாரம் உயிருமோமோட்சவீடு
இடைவெளி தடுமாறாது இன்முகம் கருணைகூர்ந்து
அம்மையே சடலந்தன்னை அன்புடன் ஏற்றிடாயே

அடைக்கலம் உனக்கேஅம்மா ஆணவமாய் கைக்கூடு
படைத்தனன் பிரமதேவன் பழுதின்றி மனிதனாக
விடைகிடைத்தது சீவனுக்கு விண்ணில்நல் மோட்சவீடு
படையொடு பாடைசேர்த்தோம் பாழுடம் பேற்றிடாயே

## சுபம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது யிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
சுபமங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்ரஹ தோஷம் நீங்க

**ஞாயிறு**

சீலமாய்வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

**திங்கள்**

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கம் தீர்ப்பாய் சந்திரா போற்றி

**செவ்வாய்**

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவில்லாதருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
ஆங்காரஹனே அவதிகள் நீக்கு....

**புதன்**

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபவகானே பொன்னடி போற்றி
பதம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி.

**வியாழன்**

குணமுள்ள வியாழ குருபகவானே
மணமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பரகுருதேசா
கிரகதோஷமின்றிக் கடாட்சித்தருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெள்ளி**

சுக்கிர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே.

**சனி**

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே
இச்சகம் வாழ இன்னருள் தாதா.

**ராகு**

அரவேனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகு கனியே ரெம்மியா போற்றி.

**கேது**

கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேது தேவே கேண்மையாய் ரஷி.

இந்த நவக்ரஹ ஸ்தோத்திரம் சொல்லி ஒவ்வொரு
ஒரு மலர் வீதம் ஒன்பது மலரை இடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

சின்னத்தம்பி
+
சிவபாக்கியம்

↓

**சிவானந்தன்**
சதானந்தன்
சிவயோகம்
சிவமலர்
சிவகுமார்

அயிலேசப்பிள்ளை
+
பார்வதிப்பிள்ளை

↓

இரத்தினகுமார்
தேவகுமார்
இரத்தினேஸ்வரி
சிறிகுமார்
இராஜமணி
**யோகேஸ்வரி**
சிவகுமார்
நந்தகுமார்
யோககுமார்
விமலேஸ்வரி

**சிவானந்தன் + யோகேஸ்வரி**

↓

சிவா உபேந்திரா
+
ராதிகா

↓

சுவர்ணவி, பேர்ஷ்விக்

குபேந்திரா
+
ரேகா

↓

மஹிசான்

தர்மேந்திரா

மயூரா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவூட்டும் நிகழ்வுகள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1955 | 2021 |
| 04 | 04 |
| 19 | 17 |



அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகவும் அட்டப்பள்ளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் .சின்னத்தம்பி சிவானந்தன்

(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

அவர்கள் 17.04.2021 (சனிக்கிழமை) அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான **சின்னத்தம்பி**, சிவபாக்கியம் அவர்களின் பாசமிகு மூத்தமகனும், **யோகேஸ்வரியின்** அன்பு கணவரும், காலஞ்சென்றவரான அயிலேசப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகனும், சிவா உபேந்திரா (பொலிஸ் உத்தியோகத்தர்), குபேந்திரா (பொலிஸ் உத்தியோகத்தர்), தர்மேந்திரா (பொறியியலாளர்), மயூரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதானந்தன், சிவயோகம், சிவமலர், சிவகுமார் ஆகியோரின் அன்பு பெரிய அண்ணாவும், மனோரஞ்சனி, கனகரெத்தினம், தேவராஜன், ரதிமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரத்தினகுமார், தேவகுமார், இரத்தினேஸ்வரி, சிறிகுமார், இராஜமணி, சிவகுமார், காலஞ்சென்ற நந்தகுமார், யோககுமார், விமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பத்மனி, இந்திரா, வேல்நாயகம், கலைச்செல்வி, காலஞ்சென்ற பொன்னம்பலம், விஜயசந்திரா, ஜெயந்தி, யோகேஸ்வரி, குகாசலம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், ராதிகா, ரேகா ஆகியோரின் அன்பு மாமனாரும், இராமநாதன், இராசம்மா மற்றும் திருச்செல்வம், கோகுலராணி ஆகியோரின் பாசமிகு சம்மந்தியும், சுவர்ணவி, பேர்ஷ்விக், மஹிசான் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 2021.04.18ம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்து செல்லப்பட்டு அட்டப்பள்ளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

தகவல்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1955 | | 2021 |
| 04 | | 04 |
| 19 | | 17 |



## அமரர் .சின்னத்தம்பி சிவானந்தன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அக்கரைப்பற்றிலிருந்து அன்போடு அங்கு சேர்ந்தீர்
அட்டப்பள்ளப் பதியினிலே மனம் சேர்ந்து மணம் கொண்டீர்
வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழி பல அமைத்து
வண்ணமிகு வாழ்வை எமக்கு வழிகாட்டிச் சென்றீரே...

சின்னத்தம்பி சிவபாக்கியம் ஈன்ற பெரும் செல்வமே
யோகேஸ்வரி கரம் பிடித்து சுகிப்புற வாழ்ந்தீரே
மகத்துவம் மிக்கதோர் மக்கட் செல்வம் கொண்டு
மாண்புறவும், மண்மனைக்கவும் மகிழ்வு கொண்டெய்தினீரே...

நகைச்சுவை உணர்வு பொங்கும் நற் பேச்சாளன் நீ
நன்னெறி காட்டி வாழ வழி காட்டும் வள்ளல் நீ
குடும்பத்தின் குலமகனாய் குன்றின் ஒளிவிளக்காய்
பிரகாசிக்கச் செய்த நீ – எம்மைப் பிரிந்து ஏன் சென்றீரோ...

இனிமேலும் எப்போது நாம் இன் முகத்தைக் காண்போமோ,
கனிவான உண்பேச்சு காற்றோடு கலந்ததேனோ
நெஞ்சம் கனக்குறது நினைவுகள் எம்மை கண்டபாலே
இறை தஞ்சமென உமதாத்மா எம்மை தவிக்கவிட்டுச் சென்றதேனோ...

பிரிவால் துயருறும்
**பாசமிகு மனைவி, மற்றும் பிள்ளைகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது"

**எனும் மாதானுபங்கியின் (திருவள்ளுவரின்) வாக்கிற்காய்
எம் சிரம் தாழ்கிறது.**

எங்கள் குடும்பத்திற்கு சிறந்த தலைமகனாய் வாழ்விற்கு நற் வழிகாட்டியாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு கதிகலங்கி, மனவேதனையடைந்து உடன் வந்து ஆறுதல் கூறிய நல்ல உள்ளங்களிற்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்து தேற்றியவர்களுக்கும் எங்களுக்கு உணவளித்தும் எங்கள் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் பங்கேற்றும் எங்களை ஆறுதல்படுத்தி பல வழிகளில் பல உதவிகளை புரிந்த அனைவருக்கும் எங்கள் உள்ளம் நிறைந்த நன்றியை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நன்றி -

**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்,**
**அட்டப்பள்ளம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்பு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாறு செல்வங்கள்

01. துணிவு
02. கல்வி
03. ஆற்றல்
04. வெற்றி
05. நன்மக்கள்
06. பொன்
07. நெல்
08. அறிவு
09. பெருமை
10. ஆயுள்
11. நல்லூர்
12. இளமை
13. நோயின்மை
14. நுகர்ச்சி
15. பொருள்
16. புகழ்

## மறக்கக்கூடாத ஐந்து

01. கற்று முடித்த பிறகு குருவை மறக்கக்கூடாது.
02. மனைவியை அடைந்தபிறகு அன்னையை மறக்கக்கூடாது.
03. உதவியைப் பெற்றவர்கள் உதவி செய்தவர்களை மறக்கக்கூடாது.
04. கரையைக் கடந்தவர் படகையும், கடவுளையும் மறக்கக்கூடாது.
05. நோய் நீங்கியவர் மருத்துவரை மறக்கக்கூடாது.

## வாழ்க்கை கணக்கு - நான்கு

01. நல்லனவற்றைக் கூட்டிக்கொள்ளுதல் (+) வேண்டும்
02. தீயனவற்றைக் கழித்துக்கொள்ளுதல் (-) வேண்டும்
03. அன்பைப் பெருக்கிக் கொள்ளுதல் (x) வேண்டும்
04. எதிர்காலத்தை வகுத்துக் கொள்ளுதல் (÷) வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org